இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.6.1.A

எண்ணியல் - தசம எண்களை முழுதாக்குதல் - தநாஅபு பயிற்சி 1.1.1-2

எண்ணியல் - தசம எண்களை முழுதாக்குதல் - தநாஅபு பயிற்சி 1.1.1-2

1) கீழ்க்காணும் தசம எண்களை அதற்கு அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்குக.

i) 8.71

- முதலில், 8.71 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 8.71 ஆனது 8.5 - ஐ விட பெரியது. எனவே, இது 9 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.



8.71 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **9** ஆகும்.

ii) 26.01

- முதலில், 26.01 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 26.01 ஆனது 26.5 - ஐ விட சிறியது. எனவே, இது 26 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.



26.01 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **26** ஆகும்.

iii) 69.48

- முதலில், 69.48 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 69.48 ஆனது 69.5 - ஐ விட சிறியது. எனவே, இது 69 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.



69.48 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **69** ஆகும்.

iv) 103.72

- முதலில், 103.72 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 103.72 ஆனது 103.5 - ஐ விட பெரியது. எனவே, இது 104 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.

103.72 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **104** ஆகும்.

v) 49.84

- முதலில், 49.84 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 49.84 ஆனது 49.5 - ஐ விட பெரியது. எனவே, இது 50 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.

49.84 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **50** ஆகும்.

vi) 101.35

- முதலில், 101.35 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 101.35 ஆனது 101.5 - ஐ விட சிறியது. எனவே, இது 101 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.

101.35 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **101** ஆகும்.

vii) 39.814

- முதலில், 39.814 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 39.814 ஆனது 39.5 - ஐ விட பெரியது. எனவே, இது 40 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.



39.814 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **40** ஆகும்.

viii) 1.23

- முதலில், 1.23 - ஐ எண்கோட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.
- 1.23 ஆனது 1.5 - ஐ விட சிறியது. எனவே, இது 1 - எனும் முழு எண்ணிற்கு அருகில் அமைந்துள்ளது.



1.23 - ஐ அருகிலான முழு எண்ணிற்கு முழுதாக்கினால் கிடைப்பது **1** ஆகும்.



2) கீழ்க்காணும் தசம எண்களைக் கொடுக்கப்பட்ட இட மதிப்பிற்கு முழுதாக்குக.

i) 5.992 இக்குப் பத்தில் ஒன்றாம் இடம்.

முழுதாக்க வேண்டிய இலக்கம் : 5.992

5.992 ≃ 6.0

5.992 - ஐ பத்தில் ஒன்றாம் இடத்திற்கு முழுதாக்கினால் கிடைப்பது 6.0 ஆகும்.

ii) 21.805 இக்கு நூறில் ஒன்றாம் இடம்.

முழுதாக்க வேண்டிய இலக்கம் : 21.805

21.805 ≃ 21.81

21.805 - ஐ நூறில் ஒன்றாம் இடத்திற்கு முழுதாக்கினால் கிடைப்பது 21.81 ஆகும்.

iii) 35.0014 இக்கு ஆயிரத்தில் ஒன்றாம் இடம்.

முழுதாக்க வேண்டிய இலக்கம் : 35.0014

35.0014 ≃ 35.001

35.0014 - ஐ ஆயிரத்தில் ஒன்றாம் இடத்திற்கு முழுதாக்கினால் கிடைப்பது 35.001 ஆகும்.

இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/R7kBkXUJsoQ

Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 31st October, 2022 :: 06:24 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

© https://ramaswamychellammaltrust.org $ **info@ramaswamychellammaltrust.org**

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**